**2016 ஜுலை 28 ஆந் திகதியன்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அதிமேதகு ஸ்டீபன் டியோன் அவர்களுடன் நடாத்தப்பட்ட இருதரப்பு உரையாடல்களைத் தொடர்ந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர அவர்களினால் ஊடகத்துறையினர்களுக்கு ஆற்றப்பட்ட உரை**

பெண்மணிகளே! கனவான்களே! உங்களுக்கு எனது மாலை வணக்கம் உரித்தாகுக!

கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு ஸ்டீபன் டியோன் அவர்களை இலங்கைக்கு வரவேற்பது எனக்கு கௌரவத்தையும் பெருமகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்ற ஓர் விடயமாகும்.

மாண்புமிகு ஸ்டீபன் டியோன் அவர்களினால் மேற்கொள்ளப்படட இவ்விஜயமானது கடனாவுடனான எமது இருதரப்புத் தொடர்புகளில் குறிப்பிடத்தக்க ஓர் சிறப்பு நிகழ்வாகும். கனடாவிலிருந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த உத்தியோகபூர்வ விஜயமானது 13 ஆண்டுகளைக் கொண்ட நீண்ட காலத்தின் பின்னர் இடம்பெறுகின்றது.

புவியியல் ரீதியாக இலங்கையிலிருந்து நீண்டதூரத்தில் கனடா அமைந்துள்ள போதிலும் கனடாவும் இலங்கையும் ஆண்டுகளின் போக்கில் குறிப்பிடத்தக்க தொடர்பைப் பகிர்ந்துள்ளதுடன் சிறிதுகாலம் எமது தொடர்புகள் விலகிய நிலைமையில் இருந்தமை துயரமான விடயமாகவிருந்தது.

இன்று இடம்பெற்ற இந்த விஜயத்துடன் எமது பன்முக, இருதரப்புத் தொடர்பை கட்டி எழுப்புவதற்கும் எமது மக்களுக்கிடையே பலமான இணைப்புகளை ஏற்படுத்துவதற்குமான எமது பொறுப்பேற்பை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

நான் இலங்கையில் சேவையாற்றிவரும் சேர்வின்ஸ்ரன் சேர்ச்சில் அவர்களினால் 2 வது உலக யுத்தத்தின்போது 'இலங்கையின் மீட்பவர்' எனப் பெயரிடப்பட்டுப் பாராட்டப்பட்டவராகிய கனடா விமானப் படையின் இளைவிமான ஓட்டியுமாகிய லியோனாட் பேர்சல் அவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என உறுதியாக நம்புகின்றேன். அக்காலப்பகுதியில் இலங்கையின் பாதுகாப்பிற்கு கனடாவினால் வழங்கப்பட்ட பங்களிப்பு என்பதை நினைவுகூருவதற்கு கொக்கல்லவில் இன்றும்கூட ஓர் நினைவுச் சின்னம் இருக்கின்றது.

இலங்கையின் பெண்மை இயக்கத்தின் முன்னோடியாகவிருந்த கலாநிதி மேரி ஏர்வின் இரத்தினம் அவர்களும் அம்பாறையில் ஹார்டி உயர்தர தொழினுட்பவியல் நிறுவகத்தை நிறுவிய பேராசிரியர் இவான் அலன் ஹார்டி அவர்களும் பரம்பரை ரீதியாக இலங்கையர்களின் நினைவில் செதுக்கப்பட்டுள்ளனர்.

நாம் கனடாவின் தாராளத்தன்மை மூலம் பல ஆண்டுகளாக நன்மையைப் பெற்றுள்ளோம். கட்டுநாயக்காவிலுள்ள விமான நிலையத்திற்கும் இலங்கை புகைவண்டித் திணைக்களத்திற்கும் நன்கொடையாக வழங்கப்பட்ட புகைவண்டி என்ஜின்கள், மதுறுஓயா அணைக்கட்டிற்கு வழங்கிய உதவி மற்றும் சுனாமி, மோதல் ஆகியவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட துயரம் ஆகியவற்றுக்கும் உதவி வழங்கியதன் மூலம் கனடா எமக்கு எப்போதும் உதவி புரிந்துள்ளது.

மோதல் உக்கிரமடைந்தபோது புகலிடம் கோரிய எமது சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் கனடா இல்லமாக விளங்கியுள்ளது.

சனநாயகம், நல்லாட்சி, சட்டஆட்சி ஆகியவற்றையும் நல்லிணக்கம், நிலையான சமாதானம், தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவதை முடிவுறுத்தல் ஆகியவற்றிற்காக தங்களுடைய வாக்குகளை இலங்கையர்கள் இட்டு கடந்த ஆண்டில் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள நாம் உலகத்துடன் எம்மை மீளவும் ஈடுபடுத்துவதிலும் நட்புறவுகளைப் புதுப்பிப்பதிலும் புதிய பங்காளித்துவங்களை

ஏற்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளதுடன் எமது மக்கள் அனைவருக்கும் உலகத்திலுள்ள சிறந்த விடயங்களை நாடிஅவற்றை பெற்றுக் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளோம்.

சனநாயகம், நல்லிணக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய தூண்கள் மீது நாம் புதிய இலங்கையொன்றை உருவாக்குவதற்கான அத்திவாரத்தை இட்டுக் கொண்டிருக்கின்றோம். இது சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து எம்மைவிட்டு நழுவிச் சென்று கொண்டிருந்த அதிகரித்த பொருளாதார வளர்ச்சியினதும் வளத்தினதும் நற்பயன்களை எமது மக்கள் அறுவடை செய்வதை அனுமதிக்கும்.

எமது உள்நாட்டுத் திறனை அதிகரிப்பதில் எமக்கு உதவியளிக்குமாறு கனடா போன்ற நண்பர்களை நாடுகின்றோம் என்பதுடன் இந்த உதவியை தொழினுட்ப நிபுணத்துவம், அதிகரித்த வர்த்தகம் மற்றும் முதலீடு மூலமாக இந்நட்பு நாடுகள் வழங்கலாம்.

எமது இன்றைய சந்திப்பில் நாம் ஒத்துழைப்பு, நல்லிணக்க முயற்சிகள், பொருளாதார ஒத்துழைப்பு, நல்லாட்சி மற்றும் மக்களுக்கு – மக்கள் தொடர்புகள் ஆகிய பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடியுள்ளோம்.

நாம் இலங்கை மக்களுக்கு பொருளாதார, சமாதான பங்கிலாபம் மற்றும் நல்லிணக்கத்தினதும் அபிவிருத்தியினதும் பின்னிய செயல் விளைவுத்தன்மை பற்றியும் கலந்துரையாடியுள்ளோம். நான் கனடாவிலுள்ள இலங்கை சமூகத்துடன் ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் நாம் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பதாகவும் பல ஆண்டுகளுக்கு முன் இடம்பெயர்ந்து சென்றவர்களும் கட்டாயமாக இடம்பெயரச் செய்யப்பட்டவர்களுமான இலங்கையர்களை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அவர்களை நாம் அழைக்கின்றோமென்பதையும் பற்றி அமைச்சர் டியோன் அவர்களுக்கு தெரிவித்துள்ளேன். நாம் இம்மக்கள் இலங்கையின் நல்லிணக்கத்திற்கும் அபிவிருத்தி முயற்சிகளுக்கும் தங்களால் செய்யக்கூடிய பங்களிப்பு பற்றி அர்த்தமுள்ள முறையில் ஆழமாக ஆராய வேண்டுமெனவும் அவருக்குக் கூறியுள்ளேன்.

இன்று முன்னதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் டியோன் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களையும் பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களையும் சந்தித்துள்ளார். அவர் வழங்கிய பின்னிய செயல்விளைவுகள் எமது நெருக்கமானவைகளும் நட:புறவு ரீதியானவைகளுமான தொடர்புகளை அதிகரிப்பதற்கான வழிவகைகளைப் பற்றி கலந்துயைடல்களைச் செய்வதற்கு பெறுமதி மிக்க வாய்ப்பொன்றை வழங்கியுள்ளன என நான் நம்புகின்றேன்.

இன்று சிறிது நேரத்திற்குப் பின்னர் அமைச்சர் டியோன் அவர்கள் எனது அமைச்சரவைச் சகபாடியான மாண்புமிகு மனோகணேசன் அவர்களை இரண்டு உத்தியோகபூர்வ மொழிகளாகிய தமிழ், சிங்களம் ஆகியவற்றில் வழங்குவதில் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்யும் ‘தேசிய மொழிகளின் சமத்துவ முன்னேற்றக் கருத்திட்டம்’ மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காகச் சந்தித்துள்ளார்.

நாளைக்கு அமைச்சர் டியோன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அங்கு வடமாகாணத்தின் ஆளுநரையும் முதல் அமைச்சரையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்திப்பார் என்பதுடன் கனடாவினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களுக்கும் விஜயம் செய்வார்.

நான் எமது தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக உயர் ஆணையாளர் ஷெல்லி வைட்டிங் அவர்களினாலும் அவருடைய குழுவினாலும் மேற்கொள்ளப்படும் குறிப்பிடத்தக்க பணிக்காக எனது நன்றியைத் தெரிவிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்புகின்றேன்.

வெளிநாட்டு அமைச்சர் டியோன் அவர்களே! நான் இலங்கையில் உங்களுடையதும் உங்களுடைய பேராளர் குழுவினதும் விஜயம மகிழ்ச்சிகரமானதாக இருக்க வேண்டுமென வாழ்த்துகின்றதுடன் விரைவில் நீங்கள் இலங்கைக்கு மீளவும் விஜயம் செய்வீர்களெனவும் இலங்கையின் இயற்கை அழகையும் வரலாற்று அமைவிடங்களையும் பார்த்து அனுபவிப்பீர்களெனவும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

நன்றி!